## 1.1 மறுதலிப்பு அபிப்பிராயம்

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் தாக்கங்களைத் தவிர்ந்த அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் காரணமாக நிதிக் கூற்றுகளில் இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் பிரகாரம் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல்

என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை அதிகார சபையால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமையாமை.**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| உரிய தரநியம தொடருடன் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள் கணிப்பீடு செய்ய வேண்டுமாயினும், அதிகார சபையின் நிதிக் கூற்றுகளில் ரூபா.மில்லியன் 4663 தொகையாக காண்பிக்கப்பட்டிருந்த காணி மற்றும் கட்டிடங்கள் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள் கணிப்பீடு செய்யப்படவில்லை. ஆகையால் குறித்த காணிகள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீள்கணிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது 05 மாவட்டங்களுக்கான நிலையங்களில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 07 இல் 49 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் உருப்படிகளை மீள்கணிப்பீடு செய்கையில் உரிய சொத்துக்களின் வகுப்பிற்கு உரியதாக இருந்த சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்தல் வேண்டுமாயினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலவு ரூபா.4,496,902 ஆன 39 மோட்டார் வண்டிகள் மற்றும் 25 மிதிவண்டிகள் மீள்கணிப்பீடு செய்யப்படவில்லை. | இது தொடர்பாக கவனத்தில் கொண்டு செவ்வையாக்கப்படுமென குறிப்பிடுகின்றேன். | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 07 இல் 60 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் செவ்வையாக பிரதிபலிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட தேய்மான அடிப்படை அடையாளம் காணுதல் வேண்டுமென்பதுடன், பந்தி இலக்கம் 74படி பயன்படுத்தும் தேய்மான முறை சொத்துக்களின் பயன்பாட்டு முறை பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும். ஆயினும், அதிகார சபையால் திசெம்பர் 31 ஆந் திகதியில் சொத்துக்களின் மீள்கணிப்பீடு மேற்கொள்கையில் பயனுள்ள ஆயுட்காலம் | இது தொடர்பாக கவனத்தில் கொண்டு செவ்வையாக்கப்படுமென குறிப்பிடுகின்றேன். | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கவனத்தில் கொண்டிருப்பினும், அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் அடிப்படையாகக் கொண்டு உரிய தேய்மானக் கொள்கை திருத்தம் செய்யப்படவில்லை. | | |
| (ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியம இலக்கம் 19 இல் 61 ஆவது பந்தி பிரகாரம் பின்னரான ஊழியர் நலன்களை மதிப்பிடுகையில் இயற் கணித முறைமைகளை பயன்படுத்தி நம்பகரமான மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டுமாயினும், அதற்கு முரணாக அதிகார சபையால் ஊழியர்கள் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் சேவைக்காலம் மட்டும் அடிப்படையாகக்கொண்டு ஊழியர்களின் நலன் மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்ததுடன், தரநியமத்தின் 65 ஆவது பந்தி படி ஊழியர் நலன்களின் பொறுப்பு மீதிக்கு சீராக்கப்படவில்லை. அதேபோன்று பணிக்கொடை பொருட்டு ஒதுக்கீடுகளை கணக்கிடும் குறைப்பாடுகள் காரணமாக ரூபா. 2,135,660 அதிகமாக கணக்கிடப்பட்டு கணக்கு வைத்ததன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டில் ஏற்புடைய தர நியமம்படி சீராக்குதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

-------------------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபைக்கு உரியதான 06 ஏக்கர் 01 ரூட் 13.2 போர்ச்சஸ் அளவிலான காணியில் 02 ஏக்கர் 03 ரூட் 7.6 பேர்ச்சஸ் காணி 2015 ஆம் ஆண்டில் தேசிய கைத்தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருப்பினும், அதன் புத்தக பெறுமதியான ரூபா.202,278,158 ஐ 2018 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் காணிப் பெறுமதியில் அகற்றப்படவில்லை. அதேபோன்று இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையிடம் கிடைக்கப்பெற்றிருந்த 02 ஏக்கர் 03 ரூட் 38.38 போர்ச்சஸ் அளவிலான காணி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. மேலும் அதிகார சபையின் நிலையங்களை பேணிச் செல்லுகின்ற அரசாங்கத்தின் 91 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு 2018 ஆம் ஆண்டு திசெம்பர் | தற்போது சட்டரீதியாக 22 காணிகளை மட்டும் சுவீகரிக்கப்பட்டுள்ளது. அதில் 09 காணிகளை மதிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய 13 காணிகளை மதிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு மதிப்பிடப்பட்டு வழங்கிய பின்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நிதிக் கூற்றுகள் தயாரிக்கும்போது நடைமுறையல்லாத சொத்துக்களை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 31 ஆந் திகதி வரை கணக்கு வைக்கப்பட்டு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் மீள்கணிப்பீடு செய்த 04 சொத்து வகையீடுகளுக்கு ஏற்புடையதான ஆண்டின் தேய்மானம் கணக்கிடப்படாமையால் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதான தேய்மானம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா.211,926,365 ஆல் குறைவாகவும் மூலதன அளிப்பு கணக்கினை அந்த அளவில் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று இரண்டு வகை சொத்துக்களுக்கு ஏற்புடையதாக மீள் கணிப்பீடு செய்த மிகை ரூபா.157,565,717 ஐ குறைவாகவும் இரண்டு வகை சொத்துக்களுக்கு ஏற்புடையதாக மீள்கணிப்பீடு நட்டம் ரூபா.54,420,648 ஐ அதிகமாக காண்பிக்கப்படுதல் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை ரூபா.54,420,648 ஐ அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நடைமுறையல்லாத சொத்துக்களை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) 2018 திசெம்பர் 31 திகதியில் கட்டிடங்களுக்கு ஏற்புடையதான திரட்டிய தேய்மான ஒதுக்கீடுகளை கணக்கிடும் குறைப்பாடுகள் காரணமாக அந்த கணக்கில் மீதி ரூபா.43,119,356 ஆல் அதிகமாகவும் மீளாய்விற்கான ஆண்டில் கட்டிடங்களின் தேய்மான செலவினம் ரூபா. 2,733,488 ஆல் குறைவாகவும் கணக்கிடப்பட்டமையால் நடைமுறை-யல்லாத சொத்துக்களின்கீழ் கட்டிடங்களின் ஆற்றல் பெறமதி ரூபா. 40,385,868 ஆல் மற்றும் ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 2,733,488 ஆல் குறைவாக நிதிக் கூற்று-களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | சொத்துக்களின் பொருட்டு தேய்மானம் கணக்கிடுதல் செவ்வையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) 2006 ஆண்டு தொடக்கம் 2015 மே மாதம் வரை ஊழியர் சேம லாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் கணக்கிடுகையில் வாழ்க்கைச் செலவு படியினை கவனத்தில் கொள்ளாமை காரணமாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்த ரூபா.33,776,537 ஆன நிலுவை உதவு தொகை மற்றும் ரூபா.5,641,480 ஆன மிகைகட்டணம் மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதனை கடந்த ஆண்டின் பற்றாக்குறைக்கு சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | நிலுவை பணத்தொகை செலுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறாமையால் ஆண்டின் செலவினமாக கவனத்தில் கொண்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்கு ஏற்புடையதான செலவினங்களை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) திறன் துறைசார் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் பதின்மூன்று ஆண்டுகளிலான தொடர்ச்சியான கல்வி நிதியங்களின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த மொத்த பெறுமதி ரூபா. 211,713,535 ஆன சொத்துக் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தமையால் மீளாய்விற்கான ஆண்டில் நடைமுறையல்லாத சொத்துக்கள் அந்த அளவில் குறைவாகவும் ஆண்டுக்கு ஏற்புடையதான தேய்மான செலவினம் ரூபா.5,878,664 குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் மீதியும் ரூபா. 5,878,664 ஆல் குறைவாகவும் பிற்போடப்பட்ட வருமான அளிப்புக் கணக்கின் மீதி ரூபா. 187,622,028 ஆல் குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறன் துறைசார் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் பதின்மூன்று ஆண்டுகளிலான தொடர்ச்சியான கல்வி நிதியத்தின் கீழான எல்லா செலவினங்களும் கருத்திட்டம்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. சம்பந்தப்பட்ட செலவினம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படினும் அது 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுகள் செவ்வையாக தயாரிப்பதன்மீது கவனம் செலத்தப்படல் வேண்டும் |
| (ஊ) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் மோட்டார் வாகனங்களின்கீழ் கணக்கு வைக்கப்படாத 41 மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பீடு செய்து அதில் ரூபா.19,947,000 தொகையிலான மீள்கணிப்பீடு பெறுமதி மோட்டார் வாகன கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பரிசோதனை செய்து செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுகள் தயாரிக்கையில் அதிகார சபைக்குரிய எல்லா வாகனங்களையும் சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

**1.5.4 முறையற்ற மதிப்பீடுகள் அல்லது மதிப்பிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை கயிகாவளை மாவட்ட பயிற்சி நிலையம் புனரமைக்கையில் தற்போதுள்ள கட்டிடத்தின் உறுதி தன்மை தொடர்பாக மதிப்பிடாது, கூரை மட்டும் அகற்றப்பட்டு 2017 ஆம் ஆண்டில் ரூபா. 17,445,822 ஐ செலவிடப்பட்டு புனரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட, கட்டிடத்தின் கூரை அகற்றுகையில் அந்த கட்டிடத்தின் செங்கல் தூண்கள் அத்திவாரத்திலிருந்து பிரிந்திருந்தமையால் புதிதாக கொன்கிரிட் தூண்களை இட்டு அந்த கட்டிடம் புனரமைத்தல், மேலதிக வேலைகளின்கீழ் விசேட ரேட்டுகளின்படி BOQ ரேட்டுகளையும் பார்க்க 43% தொடக்கம் 150% வரை அதிகமான ரேட்டுகளுடன் வெட் வரியின்றி ரூபா. 1,170,000 ஐ அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | கூரையின் சட்டகம் கழட்டும்போது, ஒவ்வொன்றுடன் தொடர்புபட்டிருந்த சுவர் பகுதிகள் மற்றும் தூண்கள் தொடர்பின்மையால் (Isolation) இவ்வாறு சுவர்கள் மற்றும் தூண்கள் வெடித்து பிரிந்து செல்லுதல் ஏற்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்த நிறுவனம் வழங்கியுள்ள விலை கணக்குகளை பயன்படுத்தியும் சிற்சில முறைகளில் திட்டங்களை மாற்றியமைத்தும் செலவிடப்படும் பணத் தொகையினை குறைத்துக்கொள்ளும் வகையில் மீண்டும் திட்டமிடப்பட்டு இக் கருத்திட்டம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | சரியான முறையில் மதிப்பீடுகளை தயாரிப்பதன்மூலம் மேலதிக வேலைகளை குறைத்துக்கொள் வதன்மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப் பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்

### 1.6.1 கிடைக்கப் பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மிரிஜ்ஜவல தேசிய தொழில்சார் பயிற்சி நிலையத்தின் நிருமாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அதிகார சபையிடம் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 3,819,000 ஐ மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், 2019 யூலை 18 ஆந் திகதி வரை நிருமாணிப்பு நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | ஒப்பந்த நிறுவனத்தின் திருப்தியற்ற செயலாற்றுகை காரணமாக கருத்திட்டம், 2014 திசெம்பர் மாதம் இறுதியிலும் கருத்திட்டத்தின் வேலைகளை முடிவுறத்த முடியாது போனமையால் 2015.01.05 ஆந் திகதி கருத்திட்டத்தின் வேலைகளை இடை நிறுத்தப்பட்டது.<br><br>இந்த சந்தர்ப்பத்தில் ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.3,819,000.00 ஆன பணத் தொகையை ஒரே முறையில் முற்றுமுழுதாக அறவிட முடியாத படியால் கருத்திட்டம் இடை-நிறுத்தும் சந்தர்ப்பமாகும்போது பிடிபணம், கருத்திட்டத்தின் ஒப்பந்த நிறுவனத்திற்கு உரியதான பொருட்கள் மற்றும் உபகரணங்களை மீண்டும் மதிப்பிடப்பட்டு பொருத்தமான செயற்பாடுகளை பின்பற்றுதலாகும்.<br><br>இந்தக் கருத்திட்டத்தில் எஞ்சிய பகுதி முடிவுறுத்துவதற்காக 2016-2017 பெறுகை திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும் திறைசேரியால் ஒதுக்கீடுகளை பதிவழித்துள்ளமையால் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதுள்ளது. | அதிகார சபையிடம் அறவிடப்பட வேண்டிய பணத் தொகையினை துரிதமாக அறவிடல் வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நுவரெலியா மாவட்ட பயிற்சி நிலையம் நிருமாணிப்பதற்காக வனராஜவத்தை என்ற காணியில் 3 ரூட் 31 பேர்ச் காணி பெற்றுக்கொள்வதன் பொருட்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுடன் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின்மீது 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி ரூபா.9,280,000 ஐ காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் | காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து கொள்வனவு செய்துள்ளதுடன், சம்பந்தப்பட்ட காணியின் பொருட்டு மூன்றாவது தரப்பால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் அதன்படி வழக்கின் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய காணியை துரிதமாக சுவீகரித்தக்கொண்டு நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

செலுத்தப்பட்டிருப்பினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த காணியை சட்ட ரீதியாக அதிகார சபையிடம் சுவீகரிக்கப்பட்டு மாவட்ட பயிற்சி நிலையம் நிருமாணிப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| நிதி ஒழுங்குவிதிக் கோவை 1646 | அதிகார சபையின் தலைமை அலுவலகம் பயன்படுத்தும் 19 வாகனங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பயன்படுத்தும் 22 வாகனங்கள் என்பவற்றில் 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ஓட்டக் குறிப்புகள் 2019 செப்தெம்பர் மாதமாகும்போதும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், அந்த வாகனங்களின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் எரிபொருள் பொருட்டு ரூபா.1,742,025 ஐ செலவிடப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ஓட்டக் குறிப்புகளை வழங்காதவர்களை கடிதங்கள்மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் ,நினைவூட்டல் கடிதங்கள் மீண்டுமொரு முறை 2019.12.31 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது. | எதிர்வருங் காலத்தில் உரியவாறு ஓட்டக் குறிப்புகளை கணக்காய்விடம் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) 2019 யூன் 17 ஆந் திகதி 09/2009 (i) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | சுற்றுநிருபத்திற்கு முரணாக அதிகார சபையின் 19 ஊழியர்களால் விரல் அடையாள இயந்திரத்தில் வருகை வெளியேறல் நேரங்களை குறிப்பிடவில்லை | இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எதிர் வருங் காலத்தில் இந்த நிலைமையை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அதிகார சபையின் எல்லா அலுவலர்களும் சுற்றுநிருப ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையில் 3.1 பந்தி | ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் 12 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது 25,000 ம் ஓட்டத்தின் பின்னர் எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்தல் வேண்டுமாயினும், தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் வாகனங்கள் தொடர்பில் 2016 ஆண்டு தொடக்கம் 2019 செப்தெம்பர் மாதம் வரை எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்யவில்லை. | 20.05.06. ஆந் திகதி எல்லா வாகனங்களுக்கும் எரிபொருள் நுகர்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. | எதிர் வருங் காலத்தில் உரியவாறு வாகனங்களில் எரிபொருள் செலவழிவு பரிசோதனை செய்தல் வேண்டும். |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி /12 இலக்க அரச தொழில் முயற்சி சுற்றுநிருபத்தின் 8.3.9 பந்தி | தொடருடன் கூடிய ஒழுங்குவிதிக்கு முரணாக அதிகார சபையின் இரண்டு வாகனங்கள்படி அமைச்சர் அவர்களதும் நிரல் வரிசை அமைச்சின் கடமைகளுக்காகவும் விடுவிக்கப்பட்டு மீளாய்விற்கான ஆண்டில் எரிபொருள் பொருட்டு அதிகார சபை ரூபா. 712,870 ஐ செலவிடப்பட்டிருந்தது. | mikr;rpy; வாகனங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் திடீர் கடமைகளின் பொருட்டு இவ் வாகனம் வழங்கப்பட்டுள்ளது. | உரிய வாகனம் அதிகார சபையிடம் கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

---

### 2.1 நிதிசார் விளைபயன்

---

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 128,946,438 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 132,115,206 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா. 3,168,768 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு தொழில்பாட்டு வருமானம் குறைவடைதலையும் பார்க்க அதிகமான சதவீதத்தால் செலவினம் குறைவடைதல் பிரதான காரணமாகியது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

---

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டில் 1.49 நிலவிய நடைமுறை சொத்துக்களின் விகிதாசாரம் 2018 ஆம் ஆண்டில் 1.09 வரை குறைவடைந்திருந்தது. அதாவது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை பொறுப்புகளை தீர்ப்பதற்காக நடைமுறை சொத்துக்களின் அளவு 0.40 ஆல் குறைவடைந்திருந்தது.

மேலும் உடனடி சொத்துக்களின் விகிதாசாரம் கவனத்தில் கொள்கையில் 2017 ஆம் ஆண்டில் 1.30 நிலவிய இவ் விகிதாசாரம் 2018 ஆண்டாகும்போது 1.00 வரை குறைவடைந்திருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) துறைசார் திறன் அபிவிருத்தி நிதியம், திறைசேரி நிதியங்கள் மற்றும் உலக தொழிலாளர் அமைப்பு (ILO) நிதியத்தின்கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 யூலை மாதம் வரை கொள்வனவு செய்திருந்த ரூபா.8,362,833 பெறுமதியிலான 1117 பயிற்சி உபகரண உருப்படிகள் சம்பந்த-ப்பட்ட பயிற்சி நிலையங்களிடம் விநியோகிக்காது அதிகார சபையின் பிரதான கிளையில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததுடன், இந்த உபகர-ணங்களின் பொருட்டு வழங்கியிருந்த உத்தரவாதக் காலம் களஞ்சியத்திலயே கடந்திருந்தது. | இந்த எல்லா உபகரணங்களிலும் அதிகளவிலானவை தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவற்றை எதிர்வருங் காலங்களில் விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்கின்ற பொருட்களை துரிதமாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் சேண்டும். |
| (அ) அதிகார சபைக்குரிய வாகனங்-களை பழுதுபார்த்தல் மற்றும் தொழில்சார் பயிற்சி கற்கைநெறிகளை மேற்கொள்கின்ற மாணவர்களை வேலை வாய்ப்புகளில் ஈடுபடுத்துவ-தற்கான பயிற்சி வழங்கும் நோக்கத்தில், அதிகார சபையால் 2011 ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வருகின்ற வாகன-ங்களை பேணும் பிரிவானது, நிறுவனத்தின் செயலா-ற்றுகைக்கு பயனுள்ளவாறு பங்களிப்பு வழங்கியிருக்கையில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி தொடக்கம் முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாது மூடப்ப-ட்டிருந்தது. வாகனங்களின் பேணல் பிரிவை பேணிச் சென்ற சதுர அடி 3,136 ஆன மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 4,312,000 கொண்ட கட்டிடம் மற்றும் நிலப் பகுதியில் ஒரு பகுதி 2020 ஆண்டு தொடக்கம் வாகனங்களின் நிறமூட்டும் கற்கை நெறிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | வாகனங்களை பராமரிப்பதற்கு தேவையான இயந்திரங்களின் குறைப்பாடுகள் காரணமாக இந்த வாகனங்களின் பராமரிப்பு பிரிவு மூடுவதற்கு உயர் முகாமைத்துவத்தால் தீர்மானிக்-கப்பட்டுள்ளது. தற்போது அந்த இடவசதிகளை பயன்படுத்தி வாகனங்களை நிறமூட்டும் கற்கைநெறி (NVQ 04) 20 மாணவர்களின் பங்களிப்புடன் மிகப் பயனுள்ளதாக பேணிச் செல்லப்படுகிறது. அதேபோன்று வாகனங்களின் பராமரிப்பு பிரிவிலிருந்த உபகரணங்களை மோட்டார் கைத்தொழில் பிரிவில் ஏனைய கற்கைநெறிகளின் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. | தொழில்சார் பயி-ற்சிக்கு தேவை-யான முக்கியமான பிரிவை மூடுவத-ற்குப் பதிலாக குறைப்பாடுகளை பூர்த்தி செய்து பேணிச் செல்வ-தன்மீது முகாமை-த்துவம் கவனம் செலுத்தப்படல் வேண்டும். அதே-போன்று உபயோ-கத்தில் உள்ள சொத்துக்களை உரியவாறு பயன்-படுத்துவதன்மீதும் கவனம் செலுத்த-ப்படல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2006 ஆம் அண்டு தொடக்கம் 2015 மே மாதம் வரை வாழ்க்கைச் செலவு படி கவனத்தில் கொள்ளாது, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் கணக்கிடப்பட்டமை காரணமாக ரூபா. 5,641,480 ஆன மிகை கட்டண தொகை மீளாய்விற்கான ஆண்டில் சம்பளம் மற்றும் வேதனங்களின் பொருட்டு வழங்கப்பட்டிருந்த திறைசேரி நிதிய-ம்மூலம் செலுத்தப்பட்டிருந்ததுடன், பொறுப்பு கூற வேண்டிய அலுவல-ர்களை அடையாளம் காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | பணிப்பாளர் சபையின் அனுமதிமீது இந்த மிகை கட்டணப் பணம் செலுத்தப்பட்டது. | கவனயீனமாக செய-ற்பட்ட அலுவலர்க-ளிடமிருந்து அறவி-டுதல் வேண்டும். |
| (அ) 04 நிலையங்களில் நிருமாணிப்பு புனரமைப்புகளின் பொருட்டு ஆலோசனை சேவைகளை பெற்றுக்-கொள்வறத்காக பகுதி நேர அரச நிறுவனத்திடம் 2014 ஆம் ஆண்டில் மற்றும் 2017 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா.1,831,817 செலுத்தப்-பட்டிருப்பினும், அந்த நிலையங்களில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2020 பெப்ருவரி 22 ஆந் திகதியிலும் ஆரம்பிக்கவில்லை என்பதுடன், நீண்ட காலம் தொடக்கம் இந்த பெறுமதி மேற்கொள்கின்ற வேலைக-ளின்கீழ் கணக்கு வைக்கப்பட்டி-ருந்தது. | உரிய ஒதுக்கீடுகள் கிடைக்கப்-பெறாமை காரணமாக நிருமாணிப்புகளை தொடங்கு-வதற்கு முடியவில்லை. | குறித்த நிலைய-ங்களில் நிருமாணிப்-புகளை துரிதமாக ஆரம்பித்தல் வேண்-டும். |
| (இ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஹேனகடுவையில் அமைந்துள்ள வெலேவத்தை என்ற காணியில் 02 ரூட் 33.50 பேர்ச் காணி அளவினை ரூபா. 5,823,000 செலுத்தப்பட்டு 2010 திசெம்பர் 30 ஆந் திகதி கொள்வனவு செய்திருப்பினும், 2020 பெப்ருவரி 24 ஆந் திகதியிலும் எந்தவொரு பயனுமின்றி பயனற்று இருந்தது. | இந்தக் காணி நிலையத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்டு-ள்ளது. தற்போது ஹேனகடுவ நிலையத்தின் பயிலுநர்களின் வெளியக செயற்பாடுகளுக்கும், நாளாந்த செயற்பாடுகளுக்கும் இந்தக் காணி பயனுள்ளவாறு பயன்படுத்தப்படுகிறது. | அதிகார சபை தாபிக்கும் சட்டத்-தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள் வதன்மீது முகாமை-த்துவம் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) அதிகார சபையால் காலி மாவட்ட அச்சீட்டு பாடசாலை பேணிச் செல்கின்ற காணியில் பழைமையான கட்டிடத்தை அகற்றப்பட்டு ரூபா. 36,347,620 பொறியியல் மதிப்பீட்டின்கீழ் புதிய கட்டிடம் நிருமாணிக்கும் நடவடிக்கைகள் 2016 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதியில் நிருமாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அதேபோன்று அந்த காணியின் உரித்தினை அதிகார சபையிடம் சுவீகரித்துக்கொள்வதற்கு 2019 திசெம்பர் மாதம் வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் 2007 ஆம் ஆண்டில் ரூபா.மில்லியன் 15 செலவிடப்பட்டு பயிற்சி நடவடிக்கைகளின் பொருட்டு கொள்வனவு செய்திருந்த அச்சீட்டு இயந்திரம் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி தொடக்கம் ஒரு பகுதியை நிருமாணித்திருந்த புதிய கட்டிடத்தில் பயனற்று வைக்கப்பட்டிருந்தது. நிருமாணிப்புகள் தாமதமாகியதன் காரணமாக 2017 ஒக்டோபர் மாதம் தொடக்கம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடத்தில் அச்சீட்டு கற்கைநெறி பேணிச் செல்லப்படுவதுடன், அந்த மாதம் தொடக்கம் 2019 யூலை மாதம் வரை வாடகையாக ரூபா.803,000 செலுத்தப்பட்டிருந்தது. | புதிய ஒப்பந்த கம்பெனியால் இந்தக் கட்டிடத்தின் நடவடிக்கைகள் 95% அளவில் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், கற்கை நெறி நடாத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேபோன்று இந்தக் காணியை சுவீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நகரமும பட்டிணமும் பிரதேச செயலாளரால் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. | துரிதமாக நிருமாணிப்பு வேலைகளை முடிவுறுத்தி பயிலுநர்களின் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |
| (உ) நாராஹேன்பிட்ட தேசிய தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் நிலத்தில் 01 ஆண்டுக்கும் 04 ஆண்டுக்கும் இடைப்பட்ட நீண்ட காலப்பகுதி, அதிகார சபைக்கு பதிவு உரித்து இல்லாத 08 மோட்டார் வாகனங்களும் பதிவு உரிமை உள்ள மோட்டார் சைக்கிள் ஒன்றும் பாதுகாப்பின்றி நிறுத்தப்பட்டிருந்தமை 2019 மார்ச் 01 ஆந் திகதி மேற்கொண்ட கள கணக்காய்வு பரிசோதனையில் அறிய வந்தது. இந்த 08 மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்த கூடிய மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதிகார சபைக்குரிய 05 வாகனங்கள் பழுதுபார்த்தல் பயனற்றதென குழுவால் உறுதிப்படுத்தியதால் மோட்டார் வாகன கைத்தொழில் கற்கைநெறிகளின் பொருட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. | பயிற்சி நடவடிக்கைகளின் பொருட்டு விடுவிக்கப்பட்டுள்ள வாகனங்களின் பதிவு புத்தகங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

## 3.3 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த விபரமான செயற்றிட்டம்படி திறன் துறைசார் அபிவிருத்தி கருத்திட்ட நிதியத்தில் ரூபா. மில்லியன் 7,430 தொகை செலவிடப்பட்டு இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் கற்கைநெறிகளை நடாத்தப்படும் 90 பயிற்சி நிலையங்கள் 2016 ஆம் ஆண்டு இறுதியில் நவீனமயப்படுத்துவதற்கும், 2017 ஆம் ஆண்டு இறுதியில் 20 பயிற்சி நிலையங்களை நிருமாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் 65 பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்தவில்லை என்பதுடன், 17 பயிற்சி நிலையங்களில் நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். துறைசார் திறன் அபிவிருத்தி கருத்திட்டம்மூலம் ஒதுக்கீடுகள் வழங்காதபடியால் உரிய இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கு முடியவில்லை. | கருத்திட்டத்தின் நிதியை முன்னுரிமை அடிப்படையில் உரிய நோக்கங்களின்மீது ஈடுபடுத்துவறத்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படாத மாவட்ட தொழில்சார் பயிற்சி நிலையமொன்றுக்கு நிருமாணிப்பு திட்டம் தயாரிப்பதற்காக ஆலோசகர் ஒருவருக்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா. 635,961 ஐ கொடுப்பனவு செய்திருப்பினும், அந்தக் கருத்திட்டம் 2019 ஆம் ஆண்டு வரை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | துறைசார் திறன் அபிவிருத்தி கருத்திட்டம்மூலம் இதுவரை நிருமாணிப்புகளுக்கான ஒதுக்கீடுகள் வழங்காதபடியால் கட்டிடம் நிருமாணித்தல் தாமதமாகியுள்ளது. | ஒதுக்கீடுகளை பெற்றுக்கொண்டு நிருமாணிப்புகளை துரிதமாக ஆரம்பித்தல் வேண்டும். |
| (இ) துறைசார் அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் மேற்கொண்டிருந்த அஹுங்கம ஹோட்டல் பாடசாலையின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் அடிப்படை திட்டங்களை வேறுபடுத்தல் மற்றும் நிருமாணிப்பு நடவடிக்கைகள் தாமதமடைதல் காரணமாக 04 கற்கைநெறிகளை 03 ஆண்டுகளுக்கு மேலான காலப் பகுதி தொடக்கம் நடாத்துவதற்கு முடியாது போயிருந்ததுடன், நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பொருட்டு ரூபா.121,809,064 செலவிடப்பட்டு 2018 மார்ச் 08 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருப்பினும், 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை சுற்றுலா ஹோட்டலில் | ஹோட்டலின் தொழில்பாட்டு நடவடிக்கைகள் 2020.02.26 ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், COVID - 19 வைரஸ் காரணமாக அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிரமங்கள் இருப்பினும், நிறுவனத்தால் அந்த நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக திட்டங்களை மேற்கொள்ளப்படுகிறது.<br><br>இந்த நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திற்கு இணை- | அதிகார சபை தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதன்மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் கற்கைநெறிகளின் பொருட்டு செய்முறை பயிற்சிக்கு தேவையென குறிப்பிடப்பட்டு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா.28,158,840 ஆன பயிற்சி உபகரணங்கள் மற்றும் ரூபா.9,397,178 ஆன அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | யாக புதிய ஹோட்டல் பொருட்டு தேவையான உபகரணங்களை கொள்வ-னவு செய்வதற்கான செயற்பாடுகளை மேற்-கொண்டதுடன், கட்டிட-ங்களை நவீனமயப்படுத்தல் செயற்பாடு பல ஆண்டு-களாக மேற்கொள்வதனால் கொள்வனவு செய்த உபகரணங்களை சில காலம் முழுவதும் பயன்-படுத்தவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவை-யில் 8.11 பந்தி பிரகாரம் ஒப்பந்தம் தவறவிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தொடர்பில் தேசிய பெறுகை முகவர் நிறுவன-த்திடம் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டுமாயினும், மிரிஜ்ஜவல நிருமாணிப்புகளை தவறவிடப்ப-ட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தொட-ர்பில் 2019 சனவரி 30 அந் திகதியிலும் அதிகார சபை அதற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை | வேறுபடுத்தல்கள் பொருட்டு போதியளவு காலம் வழங்க-ப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதி-கமாக தாமத நட்டக் கட்டணங்கள் அறிவடுவதற்கு அமைவாக எனிலும், கருத்திட்டம் முடிவுறுத்துவதற்கு வாய்ப்பு மற்றும் காலம் வழங்கப்பட்டது. ஆயினும், தொடர்புடைய ஒப்பந்த நிறுவனம் கருத்திட்டம் முடிவுறு-த்துவதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளவில்லை என்பதுடன், தொடர்ச்சியாக அதன் செயலா-ற்றுகை திருப்தியளிக்கப்படா-மையால் 2018.10.10 ஆந் திகதி கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்-கள்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மிரிஜ்ஜவல தேசிய தொழில்சார் பயிற்சி நிலையத்தின் 2019 யூலை 19 ஆந் திகதி நிருமாணிப்புகள் தொடர்பாக மேற்கொண்ட பௌதீக பரிசோதனையில்4½ ஏக்கர் அளவி-லான நிலப்பகுதியில் ஒருபுறமாக நிருமாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்-தின் முதலாவது மாடியில் சுவர்கள் வெடித்து இருத்தல், மின்சாரம் வழங்கல் நடவடிக்கைகள் பாதுகாப்பாக மேற்கொள்ளாமை, | முதலாவது மாடியில் சில சுவர்கள் வெடித்துள்ளதாகவும், சில சுவர்களில் கற்கள், உடைந்து/தளர்ந்து இருந்த-மையும், கொங்கிரீட் தூண்-களில் சில இடங்களில் (Honey Combs) உள்ளமையும் உண்மையாகும். இந்த குறைப்பாடுகள் காரணமாக ஒப்பந்தம் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை | நிருமாணிப்பு மேற்பார்-வைகளுக்காக அதிகார சபையின் அலுவலர் ஒருவரை ஈடபடுத்தி நிருமாணி-ப்புகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதன்மீது முகாமைத்துவம் கவ-னம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முதலாவது மாடியில் சீமெந்து கற்களில் நிருமாணிக்கப்பட்டிருந்த பெரும்பாலான சுவர்கள் இடிந்து விழுந்திருத்தல், அதன் Colum உரிய தரத்தில் நிருமாணிக்கப்படாமை காரணமாக கொன்கிரீட் உடைந்து, அதற்கு பயன்படுத்தியிருந்த கம்பிகள் வெளிப்புறமாக வெளிப்பட்டு துருப்பிடித்திருந்ததுடன், இந்தக் கட்டிடத்தின் நிருமாணிப்புகள் 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் கைவிடப்பட்டிருந்தமையால் பயன்படுத்துவதற்கு இயலாத நிலையில் காணப்பட்டது. | மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) நிருமாணிப்பு வேலைகளை முடிவுறுத்தப்பட்டு கையளிக்கப்படாமையால் உடன்படிக்கை மீறியதன்மீது 2015 சனவரி 05 ஆந் திகதி மிரிஜ்ஜவல வேலைத்தள கட்டிடம் நிருமாணிக்கும் ஒப்பந்தம் முடிவுறத்தப்பட்டிருப்பினும், ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு முரணாக ஒப்பந்தக்காரருக்கு சொந்தமான நிருமாணிப்பு உபகரணங்கள் 58 ஐ கணக்காய்வு திகதியான 2019 யூலை 18 ஆந் திகதி வரை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், அவை பாதுகாப்பின்றி வேலைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த நிறுவனத்திடம் செலுத்தப்பட்டுள்ள முற்பணத் தொகை மற்றும் தாமத நட்டக் கட்டணங்கள் மற்றும் எஞ்சிய நிருமாணிப்பு பகுதிகளுக்கான 25% ஆன மிகை கட்டணம் அறவிடுவதற்காக வேறு முறை இல்லாத படியால், ஒப்பந்த நிறுவனத்திறகு உரியதாகும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்மூலம் ஏற்புடைய அறவிடுதல்களை சீராக்குவதற்கு நடவடிக்கையாகும். | ஒப்பந்த உடன்படிக்கைக்கு முரணாக நடவடிக்கை மேற்கொண்டதால், எதிர்காலத்தில் நட்டஈடு செலுத்த வேண்டிய நிலை ஏற்படும என்பதை சுட்டிக்காட்டுகின்றேன். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.3 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் 13 துறைகளுக்கு ஏற்புடையதாக தொழில்சார் பயிற்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 09 முழுநேர கற்கை நெறிகளிலும் 39 பகுதிநேர கற்கைநெறிகளிலும் 64 பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | மீளாய்விற்கான ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட பூரண மற்றும் பகுதிநேர கற்கைநெறிகளுக்கிடையில் வினவப்பட்டுள்ள கற்கைநெறிகளை பல்வேறு காரணங்களால் தொடங்குவதற்கு முடியவில்லை. | –அடைந்துக் கொள்ள வேண்டிய இலக்குகளை கவனத்தில் கொண்டு செயற்றிட்டம் தயாரித்தல் வேண்டும். |